**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் (“சபை”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தகிதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, நிதியம் மற்றும் ஒதுக்கங்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்தது வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

சபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிரயாத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி நிலைமை கூற்றில், விபரமான வருமான கூற்றில், நிதியம் மற்றும் ஒதுக்கங்கள் மாற்றமடையும் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட முக்கியமான விடயங்களை மாற்று முறைமைகளின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

இவ்விடயங்களின் காரணமாக அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத காசு மற்றும் நிதி நிலைமை கூற்று, விபரமான வருமான கூற்று, நிதியம் மற்றும் ஒதுக்கங்கள் மாற்றமடையும் கூற்று, மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக ஏதாவது ஒரு செம்மையாக்கல் அத்தியவசியமானதாக உள்ளது என்பதனை எனக்கு தீர்மானிக்க முடியாதுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தலும் நியாயமாக சமர்ப்பித்து மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையினை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையினை பயன்படுத்துதல் சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடாத்தப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு சபை நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் கிரயம் அல்லது நிகர தேறக்6கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு இருப்பு மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் இறுதி இருப்பின் நிகர தேறக்கூடிய பெறுமதியினைத் பெற்றுக்கொள்ளாது ரூபா 90,344,597 கிரயத்திற்கு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டிலிருந்து இறுதி இருப்பின் தேறக்கூடிய பெறுமதி அல்லது கிரயப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு இருப்பினை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் பிரகாரம் கிரயம் அல்லது நிகர தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு இருப்பு மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 77 ஆம் பந்தியின் பிரகாரம் வழக்கமான செயற்பாடுகளிலிருந்து தோன்றுகின்ற இலாபம் அல்லது நட்டத்தை உழைப்பதற்குரிய வரிச்செலவானது இலாபம் அல்லது நட்டத்தின் ஒரு பகுதியாக விபரமான வருமானக்கூற்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் பிரகாரம் இலாபம் அல்லது நட்டத்தை உழைப்பதற்குரிய வரிச் செலவு இலாபம் அல்லது நட்டத்தின் ஒரு பகுதியாக விபரமான வருமானக் கூற்றில் |

| | | | |
|---|---|---|---|
| | சரிச் செலவினைக் கணித்து இலாபத்திற்கு எதிராக செம்மையாக்கப்பட்டிருக்கவில்லை. | | சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 79(ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதிலும் இன்னும் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 360,329,234 கிரயமான சொத்துக்கள் சம்பந்தமாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட போதிலும் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்கள் சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 12 ஆம் பந்தியின் பிரகாரம அரசாங்கத்தின் மானியமானது அந்த மானியத்தின் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நோக்கமாகக் கொள்ளப்படுகின்ற காலப்பகுதிக்குள் முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பீடு செய்யும் போது அடையாளம் காணப்பட வேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக பல்வேறு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக கிடைத்துள்ள ரூபா 27,509,000 தொகையான 05 வகையான மானியங்கள் மீளாய்வாண்டின் போதும் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளின் மூலம் இந்த மானியம் காலக்கழிவு செய்யப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் பிரகாரம் அரசாங்கத்தின் மானியமானது அந்த மானியத்தின் பிரதிபலனைப் பெற்றுக்கொள்வதற்கு நோக்கமாகக் கொள்ளப்படுகின்ற காலப்பகுதிக்குள் முறையான அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தை கணிப்பீடு செய்யும் போது அடையாளம் காணப்படுதல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 24 இன் 16 மற்றும் 17 ஆம் பந்திகளின் பிரகாரம தொடர்புபட்ட தரப்பினர்களுக்குச் செலுத்தப்பட்ட மிகையூதியம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தின் பிரதான முகாமைதத்துவ ஆளணியின் | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புபட்ட தரப்பினர்களுக்கு செலுத்தப்பட்ட மிகையூதியம் மற்றும் ஏனைய படிகள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 24 இன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | அத்தகவல்கள் அல்லது தொடர்புபட்ட தரப்பினர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறவில்லை என்பது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 42 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான பிழைகளை சரிசெய்யும் போது ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மொத்தமாக ரூபா 86,965,997 தொகையான முன்னைய காலப்பகுதிக்கான 304 பிழைகளை சரிசெய்யும் போது ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் பிழைகளை சரிசெய்வதற்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் 42 ஆம் பந்திக்கு இணங்க சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் முன்னைய காலப்பகுதிக்கான பிழைகளைச் சரிசெய்யும் போது ஒப்பீட்டு பெறுமதிகள் மீண்டும் வெளிப்படுத்தப்பட வேண்டியதுடன் பீழைகளை சரிசெய்வதற்குரிய தகவல்கள் நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊழியர் பிரதிபலன் கடப்பாடுகளை கணிப்பீடு செய்தபோது இழப்பீட்டு கணிப்பீட்டு கருதுகோள் பயன்படுத்தப்படுகின்றது என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தும் அதற்கிணங்க சரியாக கணிப்பீடு செய்தல் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக ரூபா 164,031,441 ஆக இருக்க வேண்டிய ஊழியர் பிரதிபலன் பொறுப்பு ரூபா 210,861,835 ஆக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஊழியர் பிரதிபலன் பொறுப்பு ரூபா 46,830,394 இனாலும் | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர் பிரதிபலன் கடப்பாட்டினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியவாறு இழப்பீட்டு கணிப்பீட்டு கருதுகோளினை பயன்படுத்தி சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்கான நட்டம் ரூபா 3,891,850 இனாலும் அதிகரித்தும் ஏனைய விபரமான வருமானங்கள் ரூபா 42,938,544 இனால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபைக்கு சொந்தமான உனவடுன சிலோன் பிளாசா மற்றும் நூதனசாலை கட்டிடங்களை திருத்தம் செய்வதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின் இறுதியில் காலி மாவட்ட செயலகத்தினால் ரூபா 46,168,392 பணம் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 434,606 பணம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான வருமானங்களும் செலவுகளும் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை ரூபா 46,163,392 இனால் தளபாடங்களும் உபகரணங்களும் ரூபா 434,606 இனால் மற்றும் அரசாங்கத்தின் மானியம் ரூபா 46,602,998 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | காலி மாவட்ட செயலகத்தினால் விற்பனைப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள தகவல்கள் நிதிப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படாமையின் காரணமாக அப்பெறுமதிகள் கணக்குகளில் தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆதனங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் கணக்குகள் அதற்கிணங்க நாளதுவரையாக்கப்படும். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களுக்குரிய அனைத்து வருமானங்களும் செலவுகளும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (இ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைகள் முடிவுசெய்யப்பட்டுள்ள ரூபா 1,911,259 கிரயமான அச்சு வேலி கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையின், தபால் அலுவலகத்தின் மற்றும் கிணற்றின் நிர்மாண நடவடிக்கைகள், ரூபா 20,555,200 செலவு செய்யப்பட்டிருந்த Ceylon | உரிய நிர்மாண நடவடிக்கைக ளை முடிவுசெய்த திகதியை உறுதிப்படுத்தி அனைத்து குறைபாடுகளும் 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு வேலைகள் முடிவுசெய்யப்பட்ட நிர்மாணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை மூலதனமாக்குவதற்கும் அதற்குரிய பெறுமானத் தேய்வுக்காக ஒதுக்கீடு செய்தலினை |

| | | | |
|---|---|---|---|
| | Plaza இலத்திரனியல் இணையதளம் மற்றும் ரூபா 5,890,041 செலவு செய்யப்பட்டிருந்த உணவு ஆய்வுகூடத்தினை பிரித்து ஒதுக்கீடு செய்வது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை முலதனமாக்காது நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளாக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 28,356,500 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. மேலும் இச்சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்படாததனால் பெறுமானத் தேய்வு செலவுகள் ரூபா 1,432,612 குறைத்து காட்டப்பட்டிருந்ததன் காரணமாக பற்றாக்குறை அத்தொகையால் குறைத்தும் நிறுத்திவைத்த உழைப்புக்கள் ரூபா 589,004 ஆல் அதிகரித்துதம் பெறுமானத் தேய்வுக்கு ஒதுக்கீடு செய்தல் ரூபா 2,021,616 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | மேற்கொளவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தேசிய இயந்திர உபகரண திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 7,251,379 செலுத்தப்பட்டிருந்தும் நிர்மாணங்கள் இடம்பெற்றிருக்காததன் காரணமாக முற்பணமாக காட்டப்பட வேண்டிய செலவுகள் பிழையாக நடைமுறை வேலையாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான | உரிய ஒப்பந்தத்தில் 20% முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்த நிறுவனம் நிர்மாண நடவடிக்கைகளை முறைப்படியாக ஆரம்பிக்காதிருந்ததுடன் உடன்படிக்கை செய்த காலப்பகுதியினை மிகைத்திருந்தும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. நிர்மாணச் செயற்பாடுகள் முடிவுறுத்தப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனால் நடைபெற்றுகொண்டிருக்கும் | நிர்மாண நடவடிக்கைகளுக்காக முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பங்களின் போது உரிய பணத்தை முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும். முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | மூலதன வேலைகள் கணக்கில் முன்கொண்டுவரப்படும் மீதியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (உ) | இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் ஏகல கைத்தொழில் பேட்டையில் நிர்மாணிக்கப்பட்ட எல்லைச் சுவருக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 3,002,725 கிரயத்தினை மீளளிப்புச் செய்யுமாறு தெரிவிதது 2024 நவம்பர் 27 ஆந் திகதி அனுப்பிவைக்கப்பட்ட இன்வொயிஸ் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக சொத்துக்கள் மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா 3,002,725 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்ட்டிருந்தது. | பொறியியல் பிரிவு வழங்கிய அறிக்கையில் இந்த நிர்மாணங்கள் தொடர்பாக எந்த தகவலும் உள்ளடக்கப்படாததுடன் இன்று வரை எக்கொடுப்பனவும் அறிக்கையிடப்பட்டிருக்காததனா ல் கணக்குகளில் தவிர்க்கப்பட்டுள்ளது.<br>விடயத்தை ஆராய்ந்து பார்த்து 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிர்மாணங்கள் மற்று ம் மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய கிரயத்தை நிதிக்கூற்றுக்களில் சரியாக அடையாளம் காணுதல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட சர்வதேச கைத்தொழில் கண்காட்சியில் மண்டப கட்டணத்தை செலுத்தவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சிடமிருந்து பெற்ற ரூபா 25,000,000 தொகையை வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கைத்தொழில் கண்காட்சி செலவுக் கணக்கிற்கு செலவு வைத்ததன் காரணமாக வருமானம் மற்றும் செலவுகள் அத்தொகையால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தது. | மண்டப கட்டண செலவுகளில் ஒரு பகுதியை மேற்கொள்வதற்காக ரூபா 25 மில்லியன் தொகை வரிசை அமைச்சினால் நேரடியாக மேற்கூறிய நிறுவனத்தின் பெயருக்கு எழுதப்பட்ட ஒரு காசோலையின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.<br>கணக்குகளைத் தயாரிக்கும் போது மேற்கூறிய செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் வரிசை அமைச்சிடமிருந்து நேரடியாக பெற்றதனால் மேற்கூறிய ரூபா 25 மில்லியன் பணம் அக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | செலவுகளைத் தீர்த்துவைப்பதற்காக பெற்ற பணத்தை நிதி ஏற்பாட்டுப் பெறுவனவாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | வங்கி கணக்கிற்கு நேரடியான பணம் அனுப்புதல்களாக கிடைத்து நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 8,704,243 வருமானத்தை சரியாக அடையாளம் கண்டு | நடைமுறைக் கணக்குகளுக்கு செலவு வைத்து மீளாய்வாண்டின் போது பெறுவனவுகளை அடையாளம் காண்பதற்காக செய்யப்பட்ட அனைத்து முயற்சிகளும் வெற்றியளிக்காத வைப்புக்கள் இவ்வாறு ஒரு கணக்கிற்கு | வங்கி கணக்கிற்கு கிடைக்கின்ற நேரடியாக அனுப்புகின்ற பணத்தை சரியாக அடையாளம் கண்டு உரிய வருமானக் கணக்கிற்கு செலவு |

| | | | |
|---|---|---|---|
| | உரிய வருமானக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. பின்னர் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்திற்கு செலவு வைக்கப்படும். | வைப்பதற்கு பொருத்தமான நடைமுறையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு முதலீட்டு ஆதனங்களின் கீழ் அடையாளம் காணப்பட்டிருந்த காணிகள் மற்றும் காணிகளை மேம்படுத்துதல் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 585,052,750 தொகையான மீள்மதிப்புச் செய்யப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்யும் போது மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதிக்குப் பதிலாக கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்ததன் காரணமாக ரூபா 13,192,683 இனால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு செலவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீண்டும் முதலீட்டு ஆதனத்தின் கீழ் கொண்டுவரப்படுகின்ற காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்தல் இடம்பெறுவதனால் அச்செயற்பாடு முடிவடைந்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்கள் நாளதுவரையாக்கப்படும். | மீள்மதிப்புச் செய்யப்பட்ட முதலீட்டு ஆதனத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்யும் போது மீள்மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஐ) | சபையினால் பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஒருங்கிணைந்து கைத்தொழில் அபிவிருத்தி கடன் திட்டத்தினை ஆரம்பித:து கைத்தொழில் கடன் நிதியம் என்ற பெயரில் ஒரு வங்கி கணக்கு பிரதேச அபிவிருத்தி வங்கியில் பேணப்பட்டிருந்தது. அக்கணக்கு மீதி நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தும் பிழையாக ரூபா 16,922,801 நிறுத்திவைத்த உழைப்புக்கள் மீதிக்கு ரூபா 3,818,242 தொகை 02 செலவுக் கணக்குகளுக்கு மற்றும் ரூபா 1,915,131 தொகை 04 வருமானக் | அவதானிப்புக்களில் குறிப்பிட்ட அனைத்து கணக்கீட்டு பதிவுகளையும் 2025 நிதிக்கூற்றுக்களின் மூலம் திருத்தம் செய்வதற்கு முயற்சி செய்யப்படும். | பிழையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள கணக்கு குறிப்புக்கள் திருத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்குகளுக்கு வரவு வைத்து கைத்தொழில் அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு ரூபா 32,656,173 இனை செலவுவைத்து அக்கணக்கு நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | மீளாய்வாண்டிற்கான சமூக பாதுகாப்பு வரிச் செலவு கணக்காய்வில் கணிப்பீடு செய்ததன் பிரகாரம் ரூபா 8,983,328 ஆக இருந்ததுடன் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 14,483,534 ஆக காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 5,500,206 வித்தியாசமும் ரூபா 707,786 தொகையான மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வரி ரூபா 2,017,014 ஆகக் காட்டப்பட்டிருந்ததனால் ரூபா 1,309,228 வித்தியாசமும் காணப்பட்டது. | எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வரிச் செலவுகளும் செலுத்த வேண்டிய வரிச் செலவுகளும் உரிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சரியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஓ) | இறப்பர் அபிவிருத்தி நிலையத்தின் வருமானம் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 39,117,075 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் கணிப்பீட்டிற்கு இணங்க ரூபா 32,736,452 ஆக இருந்ததனால் ரூபா 6,298,334 வித்தியாசம் காணப்பட்டது. | 2025 நிதிக்கூற்றுக்களில் தேவையான சரிசெய்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானங்களை சரியாக கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

| வியடம் | தொகை (ரூபா) | வழங்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| நாட்குறிப்பு வவுச்சர்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் | 351,258,273 | துணைப்பதிவேடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான | பட்டோலைகளுடன் நாட்குறிப்புக்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | நாட்குறிப்பு வவுச்சர்களுக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் முன்னைய ஆண்டு |

| | | | |
|---|---|---|---|
| முன்னைய ஆண்டுக்கான செம்மையாக்கல்கள் | விபரம் (Narration) | 2025 ஆம் ஆண்டிற்காக மாதாந்த அடிப்படையில் நாட்குறிப்புக்கள் கோவை செய்யப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். | செம்மையாக்கல்களுக்கான துணைப் பதிவேடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல் விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 12,317,092 தொகையான முற்கொடுப்பனவு மீதிகளை தீர்த்துவைப்பதற்கு, ரூபா 14,268,336 தொகையான வணிக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு மற்றும் 04 விசேட செயற்திட்டங்களுக்காக கைத்தொழில் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய 02 ஆண்டுகள் காலமாக காணப்பட்டு வரும் ரூபா 9,373,908 மீதியினை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரிவுகளுடன் ஒருங்கிணைந்து மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கும் தீர்த்துவைப்பதற்கு போதியளவு தகவல்கள் இல்லாது நீண்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்படுகின்ற மீதிகளை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முற்கொடுப்பனவு மீதிகள் தீர்த்துவைக்கப்பட வேண்டியதுடன் கிடைக்க வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 19,678,888 தொகையான வணிக கடன்கொடுத்தோரின் கீழ் செலுத்த வேண்டிய மீதி மற்றும் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் ரூபா 20,981,281 தொகையான ஏனைய கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவு மீதிகளை தீர்த்துவைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில மீதிகள் அமைச்சு நிதியினை மீளளிப்புச் செய்வதன் மூலம் செலுத்த வேண்டியுள்ளது. கடன்கொடுத்தோர் மீதிகள் சம்பந்தமாக உரிய நிறுவனங்களை விசாரித்து கணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை தாமதமின்றி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 2(1) மற்றும் 102 ஆம் பிரிவுகள் | சபை வருமான வரிக்காக பதிவுசெய்வதற்கு அல்லது வரி விடுதலையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரிக்காக பதிவு செய்வதற்கு அல்லது வரி விடுதலையினைப் பெற்றுக் கொள்ளவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க தீறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களுக்கு வாகனங்களை கொள்வனவு செய்தல் நிறுத்திவைக்கப்பட்டிருந்தும் சபையின் உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் குறிக்கோளில் ரூபா 10,750,000 கிரயமான 40 ஆசனங்களைக் கொண்ட இரண்டு பயணிகள் பஸ்கள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் திறைசேரியின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை | பின்னர் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனம் கொள்வனவு செய்தலினை மேற்கொள்ளும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளு தல் வேண்டும். |
| (இ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03(vii) | முகாமைததுவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரம் இல்லாது புதிய ஆட்சேர்பபுக்கள் மேற்கொள்ளப்படாதிருக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த அடிப்படையில் 106 உத்தியோகத்தர்கள் | பின்னர்பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளும் போது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் பிரிவு மற்றும் 2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 12.5 ஆம் பிரிவு | சேர்த்துக்கொள்ளப்பட்டு 61 நபர்கள் நிரந்தரமாக்கப்பட்டார்கள். 2024 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் 41 ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவர்களில் 32 நபர்களும் 2024 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட 32 ஊழியர்களுமாக 64 ஊழியர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். | | பெற்றுக்கொள்ளப் படுதல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத் தப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 3.4(ix) ஆம் பந்தி மற்றும் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பதில் கடமை பார்க்கும் நியமனம் வழங்க கூடியதானது ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை ஒரு தற்காலிக பரிகாரமாக மாத்திரம் என்ற போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்காக 19 உத்தியோகத்தர்கள் பதில் கடமை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 3,179,020 பதில் கடமை படி செலுத்தப்பட்டிருந்தது. | பின்னர் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிரந்தர நியமனங்களை துரிதமாக மேற்கொண்டு பதில் கடமை அடிப்படையில் ஈடுபடுத்தும் காலத்தினை குறைத்தல் வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2025 ஆகஸ்ட் 19 ஆந் திகதி அதாவது 05 மாதங்களுக்கு மேற்பட்ட கால தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் |

| | | | |
|---|---|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பிரிவு | | | வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 58,575,270 பற்றாக்குறையானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 16,596,485 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 75,171,755 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு விற்பனை வருமானம் ரூபா 57,463,192 இனால் அதிகரித்தல், விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள் ரூபா 92,337,628 இனால் குறைவடைதல் என்பவற்றிற்கு எதிராக விற்பனைகள் மற்றும் சேவைக் கிரயம் மற்றும் நிருவாகச் செலவுகள் முறையே ரூபா 64,247,709 இனாலும் ரூபா 103,266,266 இனாலும் அதிகரித்தலும் அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 98,195,000 இனால் குறைவடைதலும் பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ஊழியர்களின் வருகையினையும் வெளிச்செல்லலினையும் பதிவு செய்தல் மற்றும் சம்பளங்களைத் தயாரித்தல் உள்ளடங்கலான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 4,900,000 பெறுமதியினைக் கொண்ட ஒரு புதிய முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்தும் தொழில்நுட்ப பலவீனங்களின் காரணமாக 2024 ஆகஸ்ட் மாதத்திலிருந்து வருகை வெளிச்செல்லலினைப் பதிவு செய்தலானது அதுவரை | பின்னர் பதிலினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொழில் நுட்ப ரீதியான பலவீனங்களைத் தவிர்த்து முறைமையிலிருந்து எதிர்பார்க்கின்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது நல்ல நிலைமைக்கு கொண்டு வர முடியவில்லையாயின் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க புதிய முறைமையின் பயன்பாடு குறைவடைந்திருந்ததுடன் அதன் மூலம் நிறைவேற்றப்படக்கூடியதாக இருந்த கடதாசிகளின் பயன்பாட்டினை குறைத்தல், மாவட்ட அலுவலகங்களிலிருந்து தலைமை அலுவலகத்திற்கு சேவையை வேண்டிக் கொள்ளுகின்ற கைத்தொழிலாளர்கள் தனிப்பட்டவர்களை ஒருங்கிணைப்புச் செய்தல், விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல் (Inquiry/Grievance) ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. | | வேண்டும். |
| (ஆ) | நாட்டை ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தினை நோக்கி மேம்படுத்துவதற்கு இலத்திரனியல் ஊடகங்களினூடாக அறிவு மற்றும் தகவல் பரிமாற்றத்தினை செய்வதனை குறிக்கோளாகக் கொண்டு 2023 நவமப்ர் 21 ஆந் திகதியிலிருந்து Industry TV என்ற பெயரில் பணத்தை செலுத்தி பார்வையிடும் வசதிகளுடன் ஒரு தொலைக்காட்சி அலைவரிசையானது சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 17,893,405 சபையினால் செலவு செய்யப்பட்டிருந்தும் 2024 ஒக்தோபர் 16 ஆந் | இந்த அலைவரிசைக்குரிய தொடக்க செயற்பாடானது உயர் முகாமைத்துவத்தின் கீழ் இடம்பெற்றுள்ளது. சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கைத்தொழிலாளர்கள் கருத்துரைகளை வெளியிடுவதற்கு மற்றும் சபையின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்ற பல்வேறு நிகழ்சித்திட்டங்கள் தொடர்பாக இந்த அலைவரிசையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அலைவரிசை மூடப்பட்டுள்ளது. | சாத்தியவள ஆய்வின் பின்னர் இவ்வாறான முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தொலைக்காட்சி அலைவரிசையினை எதிர்பார்த்த செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்துதல் வேண்டும். பயன்படுத்துதல் சிக்கனமற்றதாயின் ஏனைய சிக்கனமான முறைமைக்கு உரிய அலைவரிசையினை முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து தற்காலிகமாக ஒளிபரப்பு நடவடிக்கையானது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | கைத்தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு துரிதமாக தீர்வினை வழங்கும் குறிக்கோளில் 2023 சனவரியிலிருந்து 1995 என்ற நேரடி அழைப்பு தொலைபேசி இணைப்பினை இலங்கை டெலிகொம் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது டன் இத்தொலைபேசி இணைப்பினை ஸ்தாபித்தல் மற்றும் தொலைபேசி கட்டணமாக 2023 சனவரி மாதத்திலிருந்து 2024 ஒக்தோபர் மாதம் வரை ரூபா 3,057,278 செலுத்தப்பட்டிருந்தும் 2024 நவமபர் 04 ஆந் திகதியிலிருந்து அழைப்பு இலக்கம் துண்டிக்கப்பட்டிருந்ததன் காரணமாக உரிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பின்னர் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அழைப்பு இலக்கத்தினை செயற்படுத்தி உரிய குறிக்கோளினை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சிறிய மற்றும் மத்திய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை நடுவர்களின் தலையீடின்றி உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு அனுப்பி உள்நாட்டு உற்பத்தியாளருக்கு சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கும் குறிக்ோகளில் சபையினால் Ceylon Plaza என்ற பெயரில் இலத்திரனியல் இணைய தளம் மற்றும் நடமாடும் தொலைபேசி உள்ளீட்டினை ஒரு தனியார் நிறுவனத்தினால் அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ரூபா | காணப்படுகின்ற பிரச்சினைகள் தொடர்பாக பணிப்பாளர் சபையுடனக் கலந்துரையாடப்பட்டதுடன் இது சம்பந்தமாக தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் மூலம் மிகவும் ஆக்கபூர்வமான ஒரு முறைமை அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. | இணைய தளத்தின் மூலம் பொருட்களை விற்பனை செய்வதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 20,555,200 பணம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் அங்கீகாரம் இன்றி செலவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளல் மற்றும் ஒரு சந்தைப்படுத்தல் திட்டத்தினை தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காதது டன் 2024 யூன் மாதத்திலிருந்து 2025 பெப்ரவரி 07 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் இணைய தளத்தின் மூலம் 17 பாவனையாளர் கட்டளைகள் மாத்திரம் கிடைத்திருந்தது. 2025 ஏப்ரல் 21 ஆந் திகதியளவில் இந்த இணைய தளத்தின் மூலம் பொருட்களை விற்பனை செய்தல் நிறுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2016 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமைப/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அரசாங்கத்தின் பங்களிப்புடன் புதிய நில முன் மேம்பாட்டு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள ரோபோ தொழில் நுட்பத்திற்கான விசேட நிலையத்திற்காக கட்டிடங்களை திருத்தம் செய்தல், சம்பளம் மற்றும் கூலிகளாக ரூபா 51 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 35 மில்லியன் பெறுமதியான ரோபோ தொழில்நுட்ப உபகரணம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தேவையான ஆளணியினரை சேர்த்துக்கொண்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காத | தற்பொழுது இந்த ரோபோ நிலையத்தின் எதிர்கால நடவடிக்கைகள் சம்பந்தமான ஒரு அறிக்கை பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் போது கிடைக்கும் சிபாரிசுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இச்செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட IRB 2600 welding power source மற்றும் Reproving of 4 existing Robot Cell துணைக் கருவிகள் மற்றும் பொறியியலாளர்களைப் பயிற்றுவித்தலும் ஏனைய செலவுகளுக்குமாக ரூபா 5,164,149 செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கையில் கைத்தொழிலை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு உதவியளிக்கும் குறிக்ோகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த இச்செயற்திட்டம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தேசிய கைப்பணிகள் சபையினால் சபையின் மாத்தறை வேலைத்தளத்திற்கு 03 பிரம்பு இயந்திரங்களைத் தயாரிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 3,850,740 செலுத்தப்பட்டிருந்தும் காட்டிலிருந்து பிரம்புகளை பிடுங்கி எடுப்பதற்கான ரூபா 351,000 பெறுமதியான இயந்திரத்தினை தவிர்த்து ஏனைய இரண்டு இயந்திரங்களைப் பூர்த்திசெய்து 2025 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையும் கைப்பணிகள் சபைக்கு ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் மாத்தறை வேலைத்தளம் 2024 ஏப்ரல் 17 ஆந் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்தது. | இந்த பிரம்பு இயந்திரங்கள் இதுவரை உள்நாட்டு ரீதியாக தயாரிக்கப்பட்டிருக்காததன் காரணமாக இறக்குமதி செய்வதற்கு குறித்த சில சிக்கலான நிலைமை நாட்டில் காணப்பட்டதனாலும் இந்த இயந்திரங்கள் தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படாததனாலும் புதிதாக தயாரிக்கப்பட வேண்டியுள்ளதனாலும் பரீட்சிப்பு மட்டத்தில் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதனாலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது வேலை | பொறுப்பேற்கப்பட்ட கட்டளைகளை பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முடிவடைந்துள்ளதுடன் பரீட்சிப்பு மட்டத்தில் உள்ளது. 2024 பெப்ரவரி மாதம் மாத்தறை பொது சேவை நிலையம் மூடப்பட்டு இந்த பிரம்பு இயந்திரத்தின் வேலைக் கட்டளைகளை பூரணப்படுத்துவதற்கு முடியுமான வகையில் அந்த இயநதிரத்துடன் இயந்திர தொழில்நுட்பவியலாளர், இரும்பு ஒட்டு வேலையாளர், பொறியியலாளர் ஆகியோர் தலைமை அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர். இயந்திரத்தின் செயற்பாடு வெற்றியளித்ததன் பின்னர் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். எனவே இதற்காக செலவு செய்யப்படும் பணத்திற்காக 25% இனை கழித்து மிகுதிப் பணத்தை மீண்டும் தேசிய கைப்பணிகள் சபைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் 17 கைத்தொழில் பேட்டைகளில் காணப்படுகின்ற 803 நிலப் பகுதிகளில் 07 ஏக்கர்களுக்கு அண்மித்த பரப்பளவுள்ள 57 நிலப் பகுதிகள் கைத்தொழிலாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கைத்தொழில் பேட்டைகளில் காணப்பட்ட 27 தொழிற்சாலைகள் செயற்படாது மூடப்பட்டிருந்ததுடன் அவற்றினை ஏனைய தொழிற்சாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை | காலி எல்பிடியவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 21 ஏக்கர்களைக் கொண்ட கைத்தொழில் பேட்டையின் B வலய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து புதிய 12 முதலீட்டாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் 05 தொழிற்சாலைகளின் தொடக்க நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு | சபையின் கைத்தொழில் பேட்டைகளில் அமைந்துள்ள காணிகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். காணிகளின் உச்ச அளவு பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. 04 கைத்தொழில் பேட்டைகளின் 23 நிலப்பகுதிகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருந்தனர். | அல்லது புதிய முதலீட்டாளர்களுக்கு ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 07 பிரிவுகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 75 செயற்பாடுகளுக்கு மத்தியில் 19 செயற்பாடுகள் உரிய பிரிவுகளினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இந்நிலைமையை எதிர்வரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைச் சாத்தியமான நிலைமையை கவனித்துப் பார்த்து திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுதல் வேண்டும். |

### 3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையினால் பேணப்பட்டு வரும் உணவு ஆய்வுகூடங்களுக்கு அங்கீகாரச் சான்றிதழ் மற்றும் ISO தரச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டில் 1,146 ஆய்வுகூட பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் இந்த ஆய்வுகூட பரீட்சிப்பு அறிக்கையினை வழங்குவதற்கான தகமைகளுடன் அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தரினை அங்கீகரித்த ஆளணிக்குள் உள்ளடக்குவதற்கு தேவையாபன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் | 2025 ஆம் ஆண்டிற்கான அங்கீகாரச் சான்றிதழினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் தேவையான ஆளணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உணவு ஆய்வுகூடத்திற்கு அங்கீகார சான்றிதழ் மற்றும் ISO தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆய்வுகூட பரீட்சிப்பு அறிக்கையினை வழங்குவதற்கான தகமையுடன் அதிகாரம் பெற்ற ஒரு உத்தியோகத்தர் அங்கீகரித்த ஆளணியில் |

| | | |
|---|---|---|
| காரணமாக ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசகரினால் உரிய பரீட்சிப்பு அறிக்கை வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,318,026 தொகைக்கு பேலியகொட இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த இன்ஜெக்ஸன் மோல்டிங் இயந்திரம் கொள்வனவு செய்த திகதியிலிருந்து 28 பயிலுனர்களுக்கு மாத்திரம் பயிற்சியினை வழங்கியிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து செயற்படாது காணப்பட்டது. | இந்த இறப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரம் 2021 ஆம் ஆண்டளவில் காணப்பட்ட குறைபாடுகளுடனான நிலைமையானது நல்ல நிலைமைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இயந்திரம் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படுகின்றதா என்பதனைப் பரீசிப்பதற்காக ஒரு தனியளார் நிறுவனத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கொள்வனவு செய்த சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் உரிய குறிக்கோள்களுக்காக பயன்படுத்த வேண்டியதுடன் முறைப்படியாக பராமரித்தல் வேண்டும். |

### 3.6 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 36,256,896 தொகையான (VAT இன்றி) ஒரு ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதி தேசிய இயந்திர உபகரண திணைக்களத்திற்கு வழங்கப்பட்டு அதன் பெறுமதியில் 20 சதவீதம் அதாவது ரூபா 7,251,379 முற்பணம் 02 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண நடவடிக்கைகளை 2018 திசெம்பர் 01 ஆந் திகதி முடிவு | உடன்படிக்கை காலப்பகுதி மிகைத்து செல்லும் வரை ஒப்பந்தத்தின் நிர்மாண வேலைகள் செயல்முன்னேற்றத்தினை காட்டியிருக்காததனால் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அரசாங்க நிறுவனங்களுக்கிடையே சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் போது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை | உரிய திணைக்களத்திடமிருந்து நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது முற்பணத்தை மீள அறவீடு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 2025 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் செலுத்தப்பட்ட முற்பணத்தை மீள அறவீடு செய்வதற்கும் சபைக்கு முடியாதிருந்தது. | மூலம் சமரசம் செய்யும் நடைமுறையினை பின்பற்றுமாறு அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க அமைச்சு செயலாளரின் மூலம் இப்பிரச்சினையை தீர்த்துவைப்பது தொடர்பாக உதவி செய்யுமாறு வேண்டி கிராமிய வீடமைப்பு, நிர்மாணங்கள் மற்றும் கட்டிட பொருள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் நிறுவன மட்டத்தில் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதற்கு இன்று வரை முடியாதிருந்தது. |

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றி 05 விலைமனுக் கோரல்களுக்கு மிகையாக மேற்கொள்ளப்படுகின்ற ரூபா 10 மில்லியனை மிகைத்த பெறுகைகள் அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக மொத்த பெறுகைப் பெறுமதி ரூபா 20,555,200 ஆன ஒரு இலத்திரனியல் வணிக வலைததளம் மற்றும் நடமாடும் தொலைபேசி உள்ளீட்டினை அபிவிருத்தி செய்யும் செயற்பாடு பல உப செயற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டு திணைக்கள பெறுகைக் குழுவின் மூலம் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பின்னர் பதிலினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்படுகின்ற ரூபா 10 மில்லியனை மிகைத்த பெறுகைகள் அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப முகவராண்மையினால் (ICTA) 2009 திசெம்பர் 02 | பின்னர் பதிலினை சமர்ப்பித்தற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தகவல் முறைமை (IS), ICT உபகரண மென்பொருள் மற்றும் மென்பொருள் |

ஆந் திகதி வழங்கப்பட்ட அரசாங்க கொள்கையின் 020101 ஆம் உப பிரிவின் பிரகாரம் தகவல் முறைமை (IS), ICT உபகரண மென்பொருள் மற்றும் மென்பொருள் அபிவிருத்தியும் ஆலோசனை சேவைகளில் செய்யப்படுகின்ற கொள்வனவுகளும் நிதி அமைச்சின் அரசாங்க நிதி திணைக்களத்தின் பெறுகைப் பிரிவினால் வழங்கப்பட்ட பெறுகை கையேடு மற்றும் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் சபையின் மனித வளங்கள் முகாமைத்துவ முறைமையினை எந்தவொரு இடத்திலிருந்தும் பயன்படுத்துவதற்காக Cloud System சேவையை கொள்வனவு செய்வதற்காக மேற்கூறிய ஏற்பாடுகள் பின்பற்றப்படாது ஒரு தனியார் கம்பனி தெரிவுசெய்யப்பட்டு 2024 யூலை 01 ஆந் திகதியிலிருந்து 2025 மே 31 ஆந் திகதி வரை ரூபா 4,638,887 செலுத்தப்பட்டிருந்தது.

அபிவிருத்தியும் கொள்வனவு செய்தல்களும் நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட பெறுகைக் கையேடு மற்றும் வழிகாட்டிகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.